# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081617

1. District மாவட்டம்: Karur   PS: V & AC Karur காவல்நிலையம்   Year: ஆண்டு   FIR No.: முதஅ எண்: 8/AC/2023   Date: நாள்: 28/10/23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption   Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Act 1988, as amended in   Sections பிரிவுகள்: 7, 7 r/w 12,
   (iii) Act சட்டம்: 2018   Sections பிரிவுகள்: 102
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Cr.P.C

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல்: 27/10/23   Date to : நாள் வரை 28/10/23
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல் 18 20hrs   Time to : நேரம் வரை 01.45hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.10.23   Time : நேரம் 1045hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.10.23   Time : நேரம் 10.45hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   சுயமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்   சுமார் 35 Kms. தெற்கு அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலக மெயின் கேட் முன்பு
   Beat Number : முறைக காவல் எண்   (b) Address : முகவரி மேற்படி சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :   District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. இமயவரம்பன்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கணேசன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 52   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்   (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு புதுக்கோட்டை மாவட்டம் கரூர் (பொறுப்பு)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. C. சக்திவேல் (50/23) S/o திரு. சின்னையன், சார்பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம்,
   2) திரு. R. தாமோதரன் (72/23) S/o ராஜூ, ஆவண எழுத்தர், அரவக்குறிச்சி கரூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— Vide Form. No. 91 —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Rs. 1,17,500/-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/AC/2023 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 102 Crpc வழக்கின் தொடர்ச்சி இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் [illegible] .............. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு [illegible] காவல் ஆய்வாளர், [illegible] காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo-motto FIR

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
28/10/23

கா. இமயவரம்பன்
காவல் துணை கண்காணிப்பாளர்
Name: பெயர்
Rank: நிலை ஊழல் தடுப்பு மற்றும் No. எண்
கண்காணிப்பு பிரிவு,
புதுக்கோட்டை மாவட்டம்
கரூர் (பொறுப்பு)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28/10/23 at 1230hrs

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.8/AC/2023 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 102 of CrPC.**

சமர்ப்பிக்கப்படுகிறது :

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சார்பதிவாளராக பணிபுரியும் திரு.C.சக்திவேல் என்பவர் தனது சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களிடமிருந்து பத்திரபதிவு உள்ளிட்ட ஏனைய அலுவல்கள் செய்துகொடுக்க பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், அந்த கையூட்டு பணத்தை அவர் அலுவல் முடித்து மாலை சுமார் 18.00 மணியளவில் வீட்டிற்கு கிளம்பி செல்வதற்கு முன்பு வசூல் செய்துகொண்டு செல்வதாகவும் நம்பத்தகுந்த தகவல் கிடைத்தது.

அதனடிப்படையில் திருச்சி, கரூர், புதுக்கோட்டை மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.உ.முருகேசன் அவர்களை அவரது கைப்பேசி எண்.9442292741 மூலம் தொடர்பு கொண்ட போது, அவரை தொடர்பு கொள்ளமுடியவில்லை. அதனால் அரசு சாட்சிகள் வேண்டி தகவல் கொடுக்கப்பட்டதன் பெயரில் அரசு சாட்சிகள் 1)திரு.K.சேகர், துணை மாநில வரி அலுவலர், கொடுமுடி வட்டம், வணிக வரித்துறை, கரூர் மாவட்டம், 2)திரு.K.ராமசாமி, உதவியாளர், மாவட்ட தொடக்க கல்வி அலுவலகம், கரூர் மாவட்டம் ஆகிய இருவரும் பிற்பகல் சுமார் 03.30 மணிக்கு கரூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்தடைந்தனர். நானும் மேற்படி அரசு சாட்சிகள் மற்றும் போலிஸ் பார்டியினருடன் மாலை சுமார் 16.00 மணிக்கு கரூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்திலும் போலிஸ் பார்ட்டியினர் அவரவர் இருசக்கர வாகனத்திலும் புறப்பட்டு அரவக்குறிச்சி to பள்ளப்பட்டி செல்லும் சாலையில் புங்கம்பாடி பிரிவு ரோடு அருகே வந்து வாகனங்கள் மறைவாக நிறுத்தப்பட்டன.

அதன்பிறகு நானும் அரசு சாட்சிகள் மற்றும் போலிஸ் பார்ட்டியினருடன் மாலை சுமார் 18.15 மணிக்கு அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலக சுற்று சுவர் நுழைவாயில் அருகே வந்து சேர்ந்த போது ஒரு நபர் அரவக்குறிச்சி சார்பதிவாளர் அலுவலக சுற்று சுவர் இரும்பு கேட் வழியாக ஒரு புளூ கலர் எக்சிகியூட்டிவ் பேக்குடன் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தார். அவரை தொடர்ந்து மூன்று நபர்களும் ஒரு பெண்ணும் அலுவலகத்திலிருந்து வெளியே வந்து அதில் ஒருவர் மெயின்கேட்டை பூட்டினார். நான் பேக்குடன் வந்த நபரை விசாரித்தபோது அவர் தான் அரவக்குறிச்சி சார்பதிவாளர் திரு.C.சக்திவேல் என்றும் அவர் அருகே இருந்த நபர்கள் அலுவலக பணியாளர்கள் என்றும் மற்றொரு நபர் பத்திர எழுத்தர் தாமோதரன் என்றும் தெரிவித்தனர். நானும் அரசு சாட்சிகளும் அவர்களிடம் அறிமுகப்படுத்தியதும் சார்பதிவாளர் திரு.C.சக்திவேல் சற்று படபடப்புடன் அய்யா "என் மீது ஏற்கனவே திருப்பூர் லஞ்ச ஒழிப்பு

அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கு இன்னும் முடியவில்லை இந்த ஒருமுறை எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று கெஞ்சினார். அவரை சமாதானப்படுத்தி அலுவலக மெயின்கேட்டை திறக்க சொன்னதும் அவர் பத்திர எழுத்தர் தாமோதரனிடம் கேட்டை திறக்கும்படி கேட்டுக்கொண்டார். தாமோதரனும் அவர் வைத்திருந்த சாவியை எடுத்து கேமரா ஆப்பரேட்டர் திருமதி.காயத்திரி அவர்களிடம் கொடுத்து அவர் கேட்டை திறந்ததும் நான், அரசு சாட்சிகள் மற்றும் அலுவலக பணியாளர்களுடன் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் மாலை சுமார் 18.20 மணிக்கு அழைத்து வரப்பட்டது. மேற்படி அலுவலகமானது கிழக்கு பார்த்தவாறு உள்ள தரைத்தளத்துடன் கூடிய கட்டிடம் ஆகும். மேற்படி அலுவலகமானது கிழக்கு பார்த்த காம்பவுண்ட் சுற்று சுவர் மற்றும் இரும்பு கேட்டுடன் கூடிய நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்ததும் வடக்கு பகுதியில் ஒரு சிறிய அறை பூட்டப்பட்டிருந்தது. அதன் அருகே உள்ள நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்ததும் தெற்கு பகுதியில் ஒரு சிறிய கணினி அறையும், அந்த அறைக்கு வடக்கு பக்கமாக 30x10 அளவுள்ள ஒரு ஹாலும் உள்ளது. அந்த ஹாலில் சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்களின் இருக்கை உள்ளது. நான் அலுவலக பணியாளர்களை பற்றி விசாரித்தபோது அவர்கள் முறையே 1)திரு.C.சக்திவேல், த/பெ.சின்னசாமி, சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி, 2)திரு.பெ.மோகன்ராஜ், த/பெ.பெருமாள், சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி, உதவியாளர், 3)திரு.இரா.வில்வக்கண்ணு, த/பெ.ராமலிங்கம், இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி, 4)திருமதி.S.காயத்திரி, க/பெ.சுரேஷ், கேமரா ஆப்ரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி என்றும் மற்றும் 5)திரு.தாமோதரன், த/பெ ராஜூ, பத்திர எழுத்தர், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம் என்றும் கூறினார்கள்.

பின்னர் அவர்களை அவரவர்கள் இருக்கைகளிலேயே அமர்ந்திருக்க அறிவுறுத்தி திடீர் சோதனை வந்த விபரத்தை தெரிவித்து திடீர் சோதனை செய்யப்பட்டது. சார்பதிவாளர் சக்திவேல் வைத்திருந்த புளூ கலர் எக்சிகியூட்டிவ் பேக்கை சோதனை செய்த போது அந்த பேக் நான்கு பெரிய அறைகளும் இரண்டு சிறிய அறைகளும் கொண்டதாக இருந்தது. அதில் முதலில் இருந்த சிறிய அறை காலியாக இருந்தது. அதை அடுத்த இருந்த ஆனந்த விகடன் வார இதழும், சபாஷ் சானக்கியா என்ற புத்தகமும், ஒரு பிளாஸ்டிக் கவரில் சக்திவேலின் கையொப்பம் இடப்படாத அடையாள அட்டை நகல் இரண்டு, அடையாள அட்டை நகல்-2, ஆதார் எண்.422060907440-ன் நகல்-2, பேன் கார்டு CJLPS9302P-ன் நகல்-2, பூபதி என்பவரின் பெயரில் உள்ள பேன் கார்டு AKJPB6128R-ன் நகல்-1, மேலும் ஊதா நிற பிளாஸ்டிக் பைலில் தமிழ் நாடு பதிவுத்துறை தலைவரின் 22.08.2023 நாளிட்ட செயல்முறை ஆணை நகல் இருந்தது. அதன் அடுத்த அறையில் டிபன் பாக்ஸ், டம்ளர், தட்டு, சிறிய துண்டு இருந்தது. அதற்கு அடுத்த அறை காலியாக இருந்தது. அதற்கு அடுத்த சிறிய அறையில் சில

பேப்பர்களும் இரண்டு காக்கி நிற கவர்கள் இருந்தது. அதில் ஒரு காக்கி கவரில் 500 ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கயில் ரூ.50,000/- மற்றும் 200 ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கையில் ரூ.20,000/- என மொத்தம் ரூ.70,000/-, மற்றொரு காக்கி கவரில் 500 ரூபாய் தாள்கள் 30 எண்ணிக்கயில் ரூ.15,000/- காணப்பட்டது. இரண்டு காக்கி கவர்களிலும் மொத்தமாக ரூ.85,000/- காணப்பட்டது.

பின்னர் திரு.சக்திவேல் சார்பதிவாளர் அவர்களை சோதனை செய்த போது அவர் தனது சட்டையின் மேல் பாக்கெட்டிலிருந்து கத்தையாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த ரூபாய் நோடடுக்களை சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்த்தபோது இருபத்திரண்டு 500 ரூபாய் நோட்டுக்களும், ஒரு 50 ரூபாய் நோட்டும் மொத்தம் ரூ.11,050/- இருந்தது. மேற்படி புளூ கலர் எக்சிகியூட்டிவ் பேக்கில் வைக்கப்பட்டிருந்த இரண்டு காக்கி நிற கவர்களிலிருந்த தொகை மொத்தம் ரூ.85,000/- மற்றும் சட்டைப்பாக்கெட்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்த தொகை ரூ.11,050/- ஆக மொத்தம் ரூ.96,050/-த்தை பற்றி விசாரித்தபோது, அவர் பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.11,050/- ல் ரூ.6,050/- அவருடைய சொந்த பணம் என்றும் இன்று காலை வீட்டிலிருந்து அலுவலகம் வந்தபோது ரூ.6,200/- செலவுக்காக கொண்டு வந்ததாகவும், இதுபற்றிய விபரம் தனிநபர் இருப்பு பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் அதில் 150 ரூபாய் மதியம் சாப்பட்டிற்காக செலவு செய்து விட்டதாக கூறியதால் தனிநபர் இருப்பு பதிவேட்டை பார்வையிட்டபோது இந்த விபரம் பதிவு செய்யப்பட்டிருந்ததால் மேற்படி தொகை ரூ.6,050/-ஐ அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. மீதமுள்ள தொகை ரூ.90,000/-த்தை பற்றி விசாரித்தபோது அவர் சரியான விளக்கம் சொல்லாததாலும், முன்னுக்குப்பின் முரணாக விபரம் சொன்னதாலும், அந்த தொகைகள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்று கருதி மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

அதன் பிறகு அலுவலகத்திலிருந்த ஆவண எழுத்தர் திரு.தாமோதரன் அவர்களை சோதனை செய்த போது தனது சட்டை உள்பாக்கெட்டிலிருந்து இரண்டு கத்தைகளாக ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதலாவதாக உள்ள கத்தையில் ஐம்பத்திநான்கு 500 ரூபாய் நோட்டுக்களாக மொத்தம் ரூ.27,000/- இருந்தது. அந்த தொகையை பற்றி விசாரித்தபோது அவர் சரியான காரணம் சொல்லாததாலும் முன்னுக்குப்பின் முரணாக சொன்னதாலும், அந்த தொகை சார்பதிவாளர் திரு.சக்திவேல் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்று கருதி மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மற்றொரு கத்தையில் ஒரு 200 ரூபாய் நோட்டும், பணிரெண்டு 100 ரூபாய் நோட்டுக்களும், ஒரு 20 ரூபாய் நோட்டும் ஆகமொத்தம் ரூ.1,420/- இருந்தது. அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும் செலவுக்கு வைத்திருப்பதாகவும் தெரிவித்ததால் அவரிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. அவர நேற்று 27.10.23 அன்று ஒரு

பத்திரம் பதிவு செய்ததாக கூறினார். அந்த ஆவணத்தின் எண்.4136/2023 என்றும் தெரிவித்தார்.

இந்த சோதனையின் போது மாலை 18.45 மணி அளவில் சார்பதிவாளர் அலுவகத்தின் வெளியே வெள்ளை நிற பையுடன் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த நபரை அலுவலகத்திற்குள்ளே அழைதத்து வந்து விசாரித்தபோது அவர் தனது பெயர் தீபன் என்றும் அவரது தந்தை ஆவண எழுத்தர் திரு.ரவிச்சந்திரன் என்றும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த பையை சோதனை செய்த போது அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 130-ம் மொத்தம் ரூ.65,000/- இருந்தது. மேலும் ரூ.8,070/- வைத்திருந்தார். அந்த தொகைகளைப்பற்றி அவரிடம் விசாரித்தபோது, அதில் ரூ.15,000/- பத்திரம் எழுதிய கூலி என்றும், மீதமுள்ள ரூ.58,070/- அவர் தனது தந்தை ஆவண எழுத்தர் பணியுடன் ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருவதாகவும் மேற்படி தொகை ரூ.58,070/- நிலம் விற்றுக்கொடுத்த வகையில் தனது தந்தைக்கு கிடைத்த கமிசன் தொகை என்றும், அந்த தொகையை தனது தந்தை தன்னிடம் வீட்டிற்கு கொண்டு செல்லும்படி கொடுத்ததாகவும், தான் வீட்டிற்கு செல்லும் வழியில் சார்பதிவாளர் அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். மேற்படி தொகையின் உண்மைத்தன்மை பற்றி விசாரித்த போது அந்த தொகை புரோக்கர் கமிசன் தொகை என்று தெரிய வந்ததால் அந்த தொகையை சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது. இன்று நேற்று ஆவண எண்.4137/2023 பதிவு செய்ததாகவும் கூறினார்.

அதன்பிறகு அலுவகத்திலிருந்து பணியாளர்களை சோதனை செய்தபோது அவர்களிடம் முறையே 1.திரு.பெ.மோகன்ராஜ், உதவியாளரிடம் ரூ.340/-, 2.திரு.இரா.வில்வக்கண்ணு, இளநிலை உதவியாளரிடம் ரூ.430 மற்றும் 3.திருமதி.S.காயத்திரி, கேமரா ஆப்பரேட்டரிடம் ரூ.20/- என தொகைகள் காணப்பட்டது. இந்த தொகைகளைப்பற்றி விசாரித்தபோது, மேற்படி மூவரும் தாங்கள் காலை அலுவலகம் வந்த போது மேற்க்கண்டவாறு தொகை கொண்டுவந்து தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்ததாகவும் அந்த தொகையில் இருந்து மதிய உணவுக்கு செலவு செய்துவிட்டு மீதி தொகையை மேற்க்கண்டவாறு வைத்திருந்ததாக தெரிவித்ததால் அலுவலக உதவியாளர் திரு.பெ.மோகன்ராஜ் மூலம் தனிநபர் பண இருப்பு பதிவேட்டை எடுத்து வர செய்து பார்வையிட்டபோது மேற்படி மூன்று பணியாளர்களும் காலை அலுவலகம் வந்த போது கொண்டு வந்த தொகையிலிருந்து செலவானது போக மீத தொகை என்று கூறினார்கள். அந்த தொகைகளை அவர்களிடமே சாட்சிகள் முன்னிலையில் திருப்பி கொடுக்கப்பட்டது.

மேலும் மேற்படி அலுவலக நுழைவாயிலில் தெற்கு பகுதியில் உள்ள கேபின் ஜன்னல் அருகே கீழே ரூ.500/- கிடந்தது. அந்த தொகையைப்பற்றி விசாரித்தபோது சார்பதிவாளரும் அலுவலக பணியாளர்களும் தங்களுக்கு அது பற்றி தெரியாது என்று தெரிவித்ததால் மேல்நடவடிக்கைக்காக அந்த தொகை ரூ.500/- கைப்பற்றப்பட்டது. மேற்படி தனிநபர் பண

இருப்பு பதிவேட்டை அதன் முகப்பு பக்கத்தில் சார்பதிவாளர் அவர்களால் 1 முதல் 97 வரை பக்கங்கள் கொண்டது என சான்றளிக்கப்பட்டு அதில் எழுதப்பட்ட பக்கங்கள் பக்கம் 1 முதல் 33 வரையும் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கையில் மொத்தம் கைப்பற்றப்பட்ட தொகை ரூ.1,17,500/- ஆகும். மேலும் அலுவலக பணியாளர்கள் 4 நபர்களுமே 27.10.2023 அலுவலகத்தில் அலுவலுக்கு ஆஜரானதற்கு வருகைப்பதிவேட்டில் சுருக்கொப்பம் செய்திருந்தார்கள். மேற்படி அலுவலக பணியாளர்கள் வருகைப் பதிவேட்டின் முதல் பக்கம் மற்றும் 2023-அக்டோபர் மாதத்திய பதிவுகள் அடங்கிய பதிவேட்டின் முகப்பு பக்கத்தில் சார்பதிவாளர் அவர்களால் 1 முதல் 15 வரை பக்கங்கள் கொண்டது என சான்றளிக்கப்பட்டு அதில் எழுதப்பட்ட பக்கங்கள் பக்கம் 1 முதல் 10 வரையும் மற்றும் தற்காலிக பணியாளர்கள் வருகைப் பதிவேட்டின் முகப்பு பக்கத்தில் சார்பதிவாளர் அவர்களால் 1 முதல் 10 வரை பக்கங்கள் கொண்டது என சான்றளிக்கப்பட்டு அதில் எழுதப்பட்ட பக்கங்கள் பக்கம் 1 முதல் 10 வரையும் பக்கங்களின் நகல்களை திருமதி.S.காயத்திரி, கேமரா ஆப்பரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம் அவர்களின் சான்றொப்பத்துடன் இரண்டு வருகைப் பதிவேடுகளையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் 27.10.2023 ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைப்பற்றி சார்பதிவாளரிடம் விசாரித்தபோது அவர் நில விற்பனை 16 ஆவணங்களும், நில உரிமை ஒப்படைப்பு ஆவணங்கள் 5-ம், செட்டில்மெண்ட் 2 ஆவணங்களும், செல்ரசீது 2 ஆவணங்களும், பிழைதிருத்தல் 1 ஆவணமும், ஒரு ரத்து ஆவணமும், ஒரு குத்தகை ஆவணமும், ஒரு நன்கொடை நிலுவை ஆவணமும் ஆக மொத்தம் 29 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் அதன்மூலம் மொத்தம் ரூ.8,60,757/-ம், வில்லங்க சான்று மற்றும் ஆவண சான்றிட்ட நகல்களுக்காக மொத்தம் ரூ.6,163/-ம் திருமணப்பதிவுக்காக ரூ.220/-ம் ஆன்லைன் மூலம் வசூல் செய்யப்பட்டதாக தெரிவித்து அலுவலக இணையதளம் *2.0 மூலம் கணினியிலிருந்து பிரிண்ட் எடுத்து சான்றொப்பம் செய்து கொடுத்ததை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஆவண எழுத்தர் திரு.தாமோதரன் அவர்கள் 27.10.2023 அன்று பத்திர பதிவுக்காக செலுத்திய கட்டண ரசீது ஒரு பக்கம் உள்ளதை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் சார்பதிவாளர் சக்திவேலை விசாரணை செய்தபோது, மேற்படி காக்கி கவர்களில் காணப்படும் பணமானது எல்லாமே இன்று தான் செய்த பத்திர பதிவிற்காக சம்மந்தப்பபட்ட ஆவண எழுத்தர்கள் மற்றும் பத்திரம் பதிவு மேற்கொண்டவர்களிடமிருந்து அன்பளிப்பாக பெற்றது என்றும் தெரிவித்தார். மேலும் தனக்கு படைவீரர் கொடிநாள் நிதி இலக்கோ அல்லது சிறுசேமிப்பு இலக்கோ நிலுவையில் இல்லை என்றும் தெரிவித்தார். இதுகுறித்து திரு.சி.சக்திவேல், சார்பதிவாளர், அரவக்குறிச்சி மற்றும் ஆவண எழுத்தரும் தனி நபருமான திரு.தாமோதரன், த/பெ ராஜூ, பத்திர எழுத்தர், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம் ஆகிய

இருவரிடமும் தனித்தனியாக வாக்குமூலங்கள் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பத்துடன் பதிவு செய்யப்பட்டது.

கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சார்பதிவாளர் திரு.C.சக்திவேல் அவர்களின் மேற்படி செயல்களானது u/s 7 of PC Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ள செயல்களாகும். இதேபோல், ஆவண எழுத்தரும் தனி நபருமான திரு.தாமோதரன், த/பெ ராஜூ, பத்திர எழுத்தர், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம் என்பவரது மேற்படி செயல்களானது u/s 7 r/w 12 of PC Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ள செயல்களாகும். மேலும் அங்கு தெற்கு பக்கம் ஜன்னல் அருகே கீழே கிடந்த ரூ.500/- ஆனது u/s 102 Cr.PC-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ளதாகும். திடீர் சோதனை தொடர்பான இதர விபரங்கள் 27.10.2023 தேதி மாலை 18.20 மணி முதல் 28.10.2023 அதிகாலை 01.45 மணி வரை தயார் செய்யப்பட்ட சோதனை நடவடிக்கையின் செயல்முறை ஆணையில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக புலன் விசாரணை செய்யும் பொருட்டு, Karur V&AC Cr.No.8/AC/2023 u/s 7, 7 r/w 12 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 102 Cr.P.C-ன்படி 01)திரு.C.சக்திவேல், த/பெ.சின்னசாமி, சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம் மற்றும் 02)திரு.தாமோதரன், த/பெ ராஜூ, பத்திர எழுத்தர், அரவக்குறிச்சி, கரூர் மாவட்டம் ஆகியோர்கள்மீது இன்று 28.10.2023-ஆம் தேதி காலை 10.45 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக வாய்மொழி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்கிறேன்.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் திடீர் சோதனை நடவடிக்கையின் செயல்முறை ஆணை ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, கரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதர நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

28/10/23

(க.இமயவரம்பன்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
புதுக்கோட்டை மாவட்டம்,
கரூர் (பொறுப்பு).